# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2015

ஆண்டு: 8 திகதி: 13.06.15

நேரம்: 2½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி ச. பாலகங்காதரன்

மாணவர் பெயர்: ______________________

1. **பின்வரும் பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. (20 புள்ளிகள்)**

ஔவையார் ஒரு தமிழ்ப் புலவர். அவர் பழங்காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்தார்.

அவர் மன்னர்களுக்கு ஆலோசகராகவும் சிறந்த மக்கள் தொண்டராகவும் விளங்கினார். அதனால், அவர் புகழ் நாடெங்கும் பரவியிருந்தது.

ஒரு நாள் ஔவையார் ஒரு காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தார். அப்போது திடீரென்று பெருமழை பெய்யத் தொடங்கிற்று. ஔவையார் வெகுநேரம் மழையில் நனைய நேர்ந்தது. அதனால், அவர் உடல் நடுங்கத் தொடங்கியது. இருப்பினும் அவர், உடலின் வருத்தத்தைத் தாங்கிக் கொண்டு நடந்தார். அப்போது சற்றுத் தூரத்தில் குடிசையொன்று தென்பட்டது.

மழைக்கு சற்று நேரம் ஒதுங்கியிருக்கக் கருதிய அவர் அவ்வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார். அவ்வீட்டில் இருந்த பெண்கள் இருவர் அவரை முகமலர வரவேற்று உபசரித்தனர். அவர்கள் ஔவையாரை வெந்நீரில் நீராடச் செய்தனர்; அணிவதற்கு உலர்ந்த ஆடைகளைக் கொடுத்தனர். பின்னர் அவர்கள், பசி தீர ஔவையாருக்கு அறுசுவை உணவு அளித்தனர். அவ்விரு மகளிரும் காட்டிய அன்பைக் கண்டு ஔவையார் மனம் நெகிழ்ந்து போனார்.

அப்பெண்கள் இருவரும் பாரியின் மகள்கள் என்பதை ஔவையார் அறிந்து கொண்டார். பாரி தமிழ் நாட்டில் பறம்பு மலையை ஆண்ட சிற்றரசன்; சிறந்த வள்ளல். அவன் திடீரென மரணமுற்றதால் அவன் மகள்கள் இருவரும் அநாதைகள் ஆனார்கள். ஔவையார் இதனை அறிந்து ஆறாத் துயரமுற்றார்.

ஔவையாருக்கு அவர்களுடைய நிலை பொறுக்க முடியாததாக இருந்தது. அவர், "என் கண்மணிகளே! நீங்கள் வருத்தப்பட வேண்டாம். உங்கள் வாழ்வு இனிமேல்தான் தொடங்கப் போகிறது. உங்களுக்கு நல்வாழ்க்கையைத் தேடித் தந்த பின்னரே நான் வேறு வேலை பார்ப்பேன்." என்று கூறினார். ஔவையாரின் பெருமையை அப்பெண்கள் நன்கு உணர்ந்தவர்கள்; அவர் சொன்ன சொல் தவறாதவர் என்பதையும் அறிந்தவர்கள். ஔவையார் கூறிய சொற்கள் அவர்களுடைய துயரத்திற்கு மருந்து போல உதவின.

1. ஔவையார் புகழ் பெறக் காரணம் என்ன? (3 புள்ளிகள்)

   ...........................................................................................................................................

   ...........................................................................................................................................

2. ஔவையார் மனவலிமை படைத்தவர் என்பதை நாம் எவ்வாறு அறியலாம்? (3 புள்ளிகள்)

   ...........................................................................................................................................

   ...........................................................................................................................................

3. பெண்கள் இருவரும் எவ்வகையில் தங்கள் அன்பை ஔவையாரிடம் வெளிப்படுத்தினர்? (3 புள்ளிகள்)

.............................................................................................................................................

.............................................................................................................................................

4. ஔவையார் ஏன் மனம் வருந்தினார்? (3 புள்ளிகள்)

.............................................................................................................................................

.............................................................................................................................................

5. ஔவையார் மீது பாரியின் மகள்கள் நம்பிக்கை கொள்ளக் காரணம் என்ன? (3 புள்ளிகள்)

.............................................................................................................................................

.............................................................................................................................................

**(ஆ) பொருள் எழுதுக** (5 புள்ளிகள்)

1. தொண்டராகவும் ..................................................................

2. வெகுநேரம் ..................................................................

3. வருத்தத்தை ..................................................................

4. அநாதைகள் ..................................................................

5. பெருமையை ..................................................................

**2. இரு வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக. (15 புள்ளிகளிகள்)**

1. வித்தகன் பந்து விளையாடிக் கொண்டிருந்தான்.

   அப்போது மாமா வீட்டிற்கு வந்தார்.

   .............................................................................................................................................

   .............................................................................................................................................

2. பாட்டி பட்டுச் சேலையைக் கடையில் பார்த்தார்.

அவர் அதை வாங்க விரும்பினார்.

..............................................................................................................................................

..............................................................................................................................................

3. நிவேதா ஓர் அழகான ஓவியத்தை வரைந்தாள்.

அவள் அதைச் சுவரில் தொங்கவிட்டாள்.

..............................................................................................................................................

..............................................................................................................................................

4. ஔவையார் நீண்ட தூரம் நடந்து களைத்தார்.

அப்போது புல்வேளூர்ப்பூதன் உணவு கொடுத்தார்.

..............................................................................................................................................

..............................................................................................................................................

5. அம்மா மளிகைக் கடைக்குச் சென்றார்.

அவர் அங்கே வாசனைத் திரவியங்களை வாங்கினார்.

..............................................................................................................................................

..............................................................................................................................................

**3. பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஐந்து சொற்களுக்குக் குறையாமல் வாக்கியங்கள் எழுதுக. (20 புள்ளிகள்)**

1) தமிழ்க் கல்வி நிலையம்

..............................................................................................................................................

..............................................................................................................................................

2) சமையலறை

..............................................................................................................................................

..............................................................................................................................................

3) உடற்பயிற்சிக் கூடம்

……………………………………………………………………………………….

……………………………………………………………………………………….

4) விளையாட்டுக்கள்

……………………………………………………………………………………….

……………………………………………………………………………………….

5) தீபாவளி

……………………………………………………………………………………….

……………………………………………………………………………………….

6) உருளைக்கிழங்கு

……………………………………………………………………………………….

……………………………………………………………………………………….

7) நூல்நிலையம்

……………………………………………………………………………………….

……………………………………………………………………………………….

8) மூவேந்தர்கள்

……………………………………………………………………………………….

……………………………………………………………………………………….

9) திருக்குறள்

……………………………………………………………………………………….

……………………………………………………………………………………….

10) பாரதியார்

……………………………………………………………………………………….

……………………………………………………………………………………….

4. உங்கள் பள்ளியில் நீங்கள் கலந்து கொண்ட முகாம் வாழ்க்கை பற்றி உங்கள் நண்பருக்கு 70 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் ஒன்று எழுதுக. (20 புள்ளிகள்)

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

5. **பின்வரும் ஏதாவது ஒரு தலைப்பில் 125 சொற்களுக்கு குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக. (25 புள்ளிகள்)**

1. அவுஸ்திரேலிய நாடும் விளையாட்டுக்களும்
2. "அன்சாக்" தினம் (Anzac Day)
3. எமது பாடசாலையில் நடைபெற்ற 2015ம் ஆண்டுக் கலைவிழா

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................